# சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.

**அ.வ எண்: 53/2018 குருசாமி (வாசா1) தேதி:17.06.2025**

**வாசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

சங்கரன்கோவில் நீதிமன்றத்தில் எனது பங்காளிகள் தாக்கல் செய்தவழக்கு என்பது யாதவ சமூதாயத்திற்காக கோவில்பெயரில் பிரதிநிதித்துவ ஸ்தானத்தில் வழக்கு தாக்கல்செய்யப்பட்டது என்றால் வழக்குதாக்கல் செய்யப்பட்டது ஆனால் அந்த வழக்கிற்கும் எனக்கு சம்மந்தம் கிடையாது. அந்த வழக்கில் சர்வே எண்.222/4 ல் உள்ள 48 செண்ட் நிலம் ஸ்ரீநிவாசபெருமாள் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்து தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதன்படி நான் தாக்கல் செய்துள்ள இந்தவழக்கானது அதே சர்வே எண்ணில் கண்ட சொத்தை பொறுத்துதாக்கல் செய்துள்ளதால் முன்தீர்ப்புதடையால் பாதிப்படைந்துள்ளது என்றால் சரியல்ல. சங்கரன்கோவில் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட மேற்படி தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாகோவில் அனைவரிடமும் நன்கொடை பெறப்பட்டு கட்டப்பட்டது என்றாலும் நான் அந்த கோவிலில் இருந்த கல்வெட்டை அகற்றிவிட்டேன் என்றாலும் கோவில்பட்டி மேற்கு காவல்நிலையத்தில் குற்றஎண்.306/2017 என என்மீது வழக்குதாக்கல் செய்யப்பட்டது என்றாலும் அந்த வழக்கு கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் CC No.435/2017 என நிலுவையில் இருந்து வருகிறது என்றாலும் சரியல்ல. நான் உண்மை விவரங்களை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அதனால் எனது வழக்கானது தள்ளுபடிசெய்யப்பட வேண்டியது என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை** 5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது..

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,

சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.